# <u>செங்கல்பட்டு நகராட்சி</u>
# <u>இரங்கல் கூட்டம்</u>
## <u>2022–ஆம் ஆண்டு மே மாதம் 11 – ம் தேதி( 11.05.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் நடைபெற உள்ள இரங்கல் கூட்டத்திற்கான பொருள்கள்</u>

<u>பொருள்–1</u>

**1–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. G. தமிழ்ச்செல்வன் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானம் குறித்த பொருள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது**

செங்கல்பட்டு **1**–வது வார்டில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக **1965**–ல் நடந்த நகரமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற முன்னாள் நகரமன்ற உறுப்பினர் திரு. M. பச்சையப்பன் முதலியார் அவர்கள் கடந்த 2017–ஆம் ஆண்டு இறந்தவிட்ட காரணத்தால், அன்னாருக்கு நகரமன்றத்தின் சார்பாக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி, அன்னார் குடும்பத்திற்கு தீர்மான நகல் ஒன்றை அனுப்பி வைக்க கோருதல்

<u>பொருள்– 2</u>

**6–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. S. ஆனந்த் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானம் குறித்த பொருள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது**

செங்கல்பட்டு **6**–வது வார்டு திராவிட முன்னேற்ற கழகத்தின் உறுப்பினராக **1971** முதல் **1976**–ஆம் ஆண்டு காலத்தில் முன்னாள் நகரமன்ற உறுப்பினரான திரு. S. அருணாச்சல முதலியார், Ex. MC அவர்கள் பணியாற்றினார். அவர் கடந்த **02–12–2017**ஆம் தேதியன்று இறந்துவிட்ட காரணத்தால், அன்னாருக்கு நகரமன்றத்தின் சார்பாக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி, அன்னார் குடும்பத்திற்கு தீர்மான நகல் ஒன்றை அனுப்பி வைக்க கோருதல்

<u>தீர்மான எண்.56 நாள். 11.05.2022</u>

1. 1–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.G.தமிழ்ச்செல்வன் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் படி முன்னாள் நகரமன்ற உறுப்பினர் திரு.பச்சையப்பன் முதலியார் அவர்கள் இறந்து விட்ட காரணத்தால் அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்தம் வண்ணம் தலைவர்

மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் எழுந்து நின்று 2 நிமிடம் மௌனம் அனுசரிக்கப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் தீர்மானம் நகலினை அன்னார் குடும்பத்திற்கு அனுப்பி வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

2. 6–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.S.ஆனந்த் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் படி முன்னாள் நகரமன்ற உறுப்பினர் திரு.S.அருணாச்சல முதலியார் அவர்கள் இறந்து விட்ட காரணத்தால் அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்தம் வண்ணம் தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் எழுந்து நின்று 2 நிமிடம் மௌனம் அனுசரிக்கப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் தீர்மானம் நகலினை அன்னார் குடும்பத்திற்கு அனுப்பி வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகரமன்றம்.

# செங்கல்பட்டு நகராட்சி
## சாதாரண கூட்டம்
## 2022 – ஆம் ஆண்டு மே மாதம் 11 – ஆம் தேதி ( 11 .05.2022) புதன் கிழமை முற்பகல் 11.15 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் நடைபெற உள்ள நகரமன்ற கூட்டத்திற்கான பொருள்கள்

பொருள்–1

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16–ல் அமைந்துள்ள டாக்டர் வரதராஜன் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.25.00 இலட்சம் $15^{th}$ CFC Untied Grand 2021–22, அன்று 29.12.2021 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டில் மழைநீர் கால்வாய் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தினை தள ஆய்வு செய்தததிலும் மேலும் பொதுமக்கள் கோரிக்கையினை ஏற்று மழை காலத்தில் வடக்கு நோக்கி கூடுதலாக மழைநீர் செல்வதால் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.25.00 இலட்சத்தில் மிகாமல் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்க ஏற்கனவே பணி உத்திரவு வழங்க ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.57 நாள். 11.05.2022

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 3–ல் அமைந்துள்ள காவல் நிலையம் எதிரில் மார்க்கெட் ரோடு (மேட்டுதெருவில்) உள்ள தற்காலிக ஆக்கிரமிப்பு காய்கறி கடைகளை அகற்றப்பட்டு உள்ளது. ஆக்கிரமிப்பு

செய்தோருக்கு மாற்று இடம் உடன் அளிக்கப்பட உள்ளது. தற்போது மேற்படி இடத்தில் மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படாத வண்ணம் சாலையின் இரு பக்கமும் பேவர் பிளாக்கில் நடைபாதை அமைந்து அதன் மேல் ஆங்காங்கே கருங்கல்லில் சிற்ப வடிவில் தடைகள் அமைக்கவும், அதற்கான செலவினத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண்.58 நாள். 11.05.2022</u>**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

<u>பொருள்–3</u>

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட நமக்கு நாமே திட்டம் 2021–22 –ன் கீழ் ஜி.எஸ்.டி சாலையில் பழைய பேருந்து நிலையத்தில் மேற்கூரை பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் பணிகள் ரூ.5.00 மதிப்பீட்டில் NSK தங்கமாளிகை மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களால் அன்று நிர்வாக அனுமதி ந.க.எண்.21519–37/2021/P2,நாள்.31.03.2022 அளிக்கப்பட்டுள்ளது. நமக்கு நாமே திட்டத்தின் வழிகாட்டுதலின் படி 100% பங்களிப்பு அளிக்கும் தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தவு வழங்க வழிவகை உள்ளதால் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி தனியார் நிறுவனம் (NSK Jewellery)மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நமக்கு நாமே திட்டம் 2021–22–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண்.59 நாள். 11.05.2022</u>**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

<u>பொருள்–4</u>

செங்கல்பட்டு நகராட்சி நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் அலுவலக பயன்பாட்டிற்கு 2 எண்ணம் புதியதாக ஈப்பு வாகனம் கொள்முதல் செய்ய ரூ.16.56 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களால் நிர்வாக அனுமதி ந.க.எண்.3765/2022/எம்3, நாள்.22.04.2022 அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண்.60 நாள். 11.05.2022</u>

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

<u>பொருள்–5</u>

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண்.1 முதல் 6 வரையுள்ள தெருமின் விளக்குகள் நகராட்சி பணியாளர்களை கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி தெருமின்விளக்குகள் மின் உதிரி பொருட்கள் அதற்கான இருப்பு கிடங்கில் குறைவாக உள்ளதனை தொடர்ந்து மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.0446/2021/இ2

**தீர்மான எண்.61 நாள். 11.05.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்–6

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள **12.03.2022** அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில் ) | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் நமக்கு நாமே திட்டம் (NNT) 1000 லிட்டர் RO Plant அமைக்கும் பணி | 4.50 | ÂU. nf.uh#nfhghš | **0.01 %** குறைவு |
| | | | M/s.அப்போலோ எண்டர்பிரைசஸ் | **0.05 %** அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய **திரு.கே.ராஜகோபால்** ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>தீர்மான எண்.62 நாள். 11.05.2022</u>

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

<u>பொருள்—7</u>

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு கீழ்கண்ட பணிகள் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள 27.04.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில் ) | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 பெரிய மணிக்கார தெரு, ராமர் கோயில் இறக்கத்தில் பைப் லைன் அமைக்கும் பணி | 1.55 | திரு. கே. ராஜகோபால் | 0.01 % குறைவு |
| | | | M/s.அப்போலோ எண்டர்பிரைசஸ் | 2.50 % அதிக/ம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட அனுமந்தபுத்தேரி அறிஞர் அண்ணா பெண்கள் மேல்நிலைப்பள்ளி பழைய பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்றுதல் பணி | 6.18 | M/s.Abbundu Interior and Construction | 0.01 % குறைவு |
| | | | M/s.Andal Associatiat | 0.25 % அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இச்செலவினம் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.63 நாள். 11.05.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்–8

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 3 –ல் உள்ள பழைய காய்கறி மார்க்கெட் பகுதியில் உள்ள வியாபாரிகளை உழவர் சந்தை இடமாற்றம் செய்து அதற்கான காய்கறி லோடு இரவில் வருவதால் இறக்குவதற்கு போதிய வெளிச்சம் இல்லாத பகுதிகளில் LED 200W கொண்டு புதியதாக அமைத்து பொருத்திட வேண்டியும் அதற்கான தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு இப்பணியினை அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.64 நாள். 11.05.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்–9

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 7–ல் உள்ள குப்பை கிடங்கில் உள்ள எடைமிஷன் பழுது ஏற்பட்டு உடைந்துள்ளதால் அதற்கு பதிலாக புதிய எடை மிஷின் வாங்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.00

இலட்சத்திற்கு இப்பணியின் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண்.65 நாள். 11.05.2022</u>

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

<u>பொருள்–10</u>

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2022 –23 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிகளின் அவரச அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குடிநீர் நிதி கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள 13.04.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 16 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பகிர்மானம் குழாய் உடைப்புகள் உடனுக்குடன் சரி செய்யவும், வால்வுகள் பழுதுகள் | 9.00 | M/s.குமரன் எலக்ட்ரிக்ல்ஸ் | 0.04% குறைவு |
| | | | M/s.அப்போலோ எண்டர்பிரைசஸ் | 1.68 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சரிசெய்யவும், நீர்தேக்க தொட்டிகள் சுத்தம் செய்ய 2022–2023 ஆண்டுக்கான பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | | | |
| 2 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 முதல் 33 வரை உள்ள குடிநீர் பிரதான குழாய், பகிர்மானம் குழாய், பொது குழாய்கள், வால்வுகள் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்ய 2022 – 2023 ஆண்டு பராமரிப்பு பணி செய்தல் | 9.00 | திரு.கே.வெங்கடேசலு | 0.01% குறைவு |
| | | | ÂU.E.rªÂu‹ | 1.68 % அதிகம் |
| 3 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 16 வரை உள்ள ஆழ்துளை கிணறு, மின்பவர் பம்பு பழுதுகள் உடனுக்குடன் சரி செய்ய 2022 – 23 ஆண்டு பராமரிப்பு பணி செய்தல் | 6.00 | M/s.குமரன் எலக்ட்ரிக்ல்ஸ் | 0.03% குறைவு |
| | | | M/s.அப்போலோ எண்டர்பிரைசஸ் | 1.91% அதிகம் |
| 4 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 முதல் 33 வரை உள்ள ஆழ்துளை கிணறு, மின்பவர் பம்பு பழுதுகள் பணி செய்திட 2022 –23 ஆண்டுக்கான பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 6.00 | திரு.கே.வெங்கடேசலு | 0.03% குறைவு |
| | | | ÂU.E.rªÂu‹ | 1.91 % அதிகம் |
| 5 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ரேடியோ மலை நீர்த்தேக்க தொட்டி பம்புரூம் உள்ளஆழ்துளை கிணறு (Borewell) HDPE பைப் லைன் மற்றும் கேபிள் மற்றும் வால்வுகள் சரிசெய்ய 2022–23ம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.80 | M/s.அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.02% குறைவு |
| | | | M/s.ஆனந்த் எண்டர்பிரைசஸ் | 2.21 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பாசத்தெரு நீர்த்தேக்க தொட்டி, பெரிய மணிக்கார தெரு நீர்தேக்க தொட்டி, கே.கே பூஸ்டர் மற்றும் ரேடியோ மலை, சப்கலெக்டர் பங்களா நீர்தேக்க தொட்டி மற்றும் தட்டான் மலை (வடமலைப்பள்ளி அருகில்) உள்ள தரைமட்ட மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் நீர்நிரப்பு பணி மின் மோட்டார்கள், மின்கேபிள்கள் பழுது 2022–23ம் ஆண்டு பாரமரிப்பு பணி செய்தல் | 6.00 | M/s.அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.02% குறைவு |
| | | | M/s.ஆனந்த் எண்டர்பிரைசஸ் | 0.72 % அதிகம் |
| 7 | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து பாலாறு படுகையில் உள்ள 10 ஆழ்துளை கிணறு, 3 உறிஞ்சு கிணறு மின்மோட்டார்கள் மூலமாக 60 HP ஸ்டாஸ்டர்கள், EB மெயின் சுவிட்ச், Carrier, HDPE பைப் லைன், கேபிள்கள் மற்றும் கெபாசிட்டர் பழுது ஏற்படும் 2022–23 ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.80 | M/s.K.ராஜகோபால் | 0.01% குறைவு |
| | | | M/s.அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.55 % அதிகம் |
| 8 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள தரைமட்ட குடிநீர் தேக்க தொட்டியிலிருந்து 24 Kg Gas குளோரினேஷன் பொதுமக்களுக்கு நாள்தோறும் பயன்படுத்தப்படும் குடிநீரில் கலக்க 2022–23 ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 3.50 | M/s.அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.01% குறைவு |
| | | | M/s.ஆனந்த் எண்டர்பிரைசஸ் | 0. 08% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள தரைமட்ட குடிநீர் தேக்க தொட்டியிலிருந்து 24 Kg Gas குளோரினேஷன் பொதுமக்களுக்கு நாள்தோறும் பயன்படுத்தப்படும் குடிநீரில் கலக்க 2022–23 ஆண்டு பராமரிப்பு பணிகள் மற்றும் சிலிண்டர் சப்ளை செய்யும் பணிக்கு | 4.00 | M/s.அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.02% குறைவு |
| | | | M/s.ஆனந்த் எண்டர்பிரைசஸ் | 0. 10% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட குடிநீர் நிதியின் 2022–23 கீழ் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள அவசரம் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0398/2022/இ2

<u>தீர்மான எண். 66 நாள். 11.05.2022</u>
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

<u>பொருள்–11</u>

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை சென்னை அவர்களின் 28.04.2022–ம் தேதிய R.No.2667/1 MM/S1/2022–ம் தேதிய கடிதம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 25.04.2022–ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மெகா தடுப்பூசி முகாம்கள் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி இந்நகருக்குட்பட்ட பகுதியில் உள்ள பொது மக்கள் வணிகர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு கொரோனா பரவா வண்ணம் தடுக்கும் பொருட்டு 1–வது தவணை, 2–வது தவணை மற்றும் பூஸ்டர் டோஸ் ஊசி

போடுவதற்கு முகாம்கள் நடத்த அதற்கு தேவையான சாமியானா, டேபில், சேர் இதர பொருட்கள் மற்றும் முகாம்களில் பணிபுரிய வருகின்ற பணியாளர்களுக்கு வாட்டர் கேன் மற்றும் டீ வழங்க வேண்டியும் இனி வரும் காலங்களுக்கு நடைபெற உள்ள கொரோனா தடுப்பூசி முகாம்களுக்கும் மேற்கண்ட பொருட்களை முகாம்களுக்கு வழங்கிட ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்.

2. நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மான எண். 67 நாள். 11.05.2022</u>
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

<u>பொருள்–12</u>

**நகரமன்ற தலைவர் திருமதி. N. தேன்மொழி நரேந்திரன்அவர்களால் பொது தீர்மானம் இயற்ற கொண்டு வரப்பட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட அனைத்தும் வார்டுகளிலும் கீழ்க்கண்டுள்ள பணிகள் அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டி உள்ளதால் இதனை நகரமன்ற கூட்டத்தில் பொது தீர்மானமாக இயற்றி மதிப்பீடு தயார் செய்து பணி மேற்கொள்ள வேண்டி கோருதல்

1. நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் பட்டியல் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்டது. தற்போது உண்மையில் வறுமை நிலையில் உள்ள அதிகமான நபர்கள் வசித்து வருவதால் மேற்கண்ட பட்டியலினை மறு சீராய்வு செய்து வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் பட்டியலை திருத்த பட்டியலாக மேற்கொள்ள அதற்கான அனுமதியினை அரசிடம் இருந்து பெற கோரும் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

2. செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் இதுவரை 50% சதவிகித வீடுகளுக்கு மட்டுமே வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனை சரி செய்ய வேண்டி மீதமுள்ள 50% சதவிகித வீடுகளுக்கும் (புறம்போக்கு) நகராட்சியின் மூலம் வரி விதிப்பு செய்து வருவாயை அதிகப்படுத்தி நிர்வாக மேலாண்மையினை மேம்படுத்துவதற்கான அனுமதியினை அரசிடம் இருந்து பெற கோரும் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
3. செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பெரும்பான்மையான வீடுகளுக்கு பழவேலி நீர் தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் பழவேலி பகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதால் நகர மக்களுக்கு பெரும் ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இதனை உடன் தடுத்து நிறுத்தி நிர்வாகத்தின் மூலம் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள கோரும் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>தீர்மான எண்.68</u>

1. செங்கல்பட்டு நகரில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் பட்டியலினை மறுசீராய்வின் மூலம் மேற்கொண்டு உண்மையில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் பட்டியலை நகராட்சியின் மூலம் கணக்கெடுப்பு முறையில் மறுபட்டியலாக தயாரிக்க அதற்கான ஆயத்த பணிகளை மேற்கொள்ள வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு நகராட்சியின் மூலம் அனுப்பி உரிய முறையில் பிரேரணை அனுமதி பெற தீர்மானிக்கப்பட்டது.
2. செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட பெரும்பாலான பகுதிகள் குடிசை பகுதிகளாக உள்ளதால் இங்குள்ள புறம்போக்கு இடத்தில் வசிக்கும் அதிகமான வீடுகளுக்கு வரி விதிப்பு செய்யவில்லை, இதனால் நகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே நகராட்சி நிர்வாக மேலான்மைமினை உயர்த்தும் வகையில் இந்நகரில் வரிவிதிப்பு இல்லாத புறம்போக்கு இடத்தில் உள்ள வீடுகளுக்கு புதியதாக லரி விதிப்பு செய்து நகராட்சியின் வருவாய் அதிகரிக்க வேண்டி அலுவலகத்தின் மூலம் உரிய பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி

உரிய அனுமதிப் பெற்று பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

பொருள் 3–ல் கண்டுள்ள பணி மிக அத்தியாவசிய பணி என்பதாலும் நகர மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதால் நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இப்பொருள் குறித்து ஆணையர்(ம) பொறியாளர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள்– 13</u>

**நகரமன்ற தலைவர் திருமதி. N. தேன்மொழி நரேந்திரன்அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 25–வது வார்டுக்கு உட்பட்ட அண்ணா நகர் முதல் மெயின் ரோடு 3–வது குறுக்கு தெருவில் இருந்து முத்துராஜா காலனி வரை கால்வாய் அமைக்க அதற்கான மதிப்பீடு தயார் செய்திட கோரும் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
2. 25–வது வார்டுக்கு உட்பட்ட மேலமையூர் பிள்ளையார் கோயில் தெருவில் இரு பக்கமும் கால்வாய் அமைக்க அதற்கான மதிப்பீடு தயார் செய்து பணி மேற்கொள்ள கோரும் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>தீர்மான எண்.69</u>

வரிசை எண் 1 முதல் 2–ல் கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள பொறியாளர் அவர்கள் அதற்கான மதிப்பீடு தயார் செய்திட அனுமதி அளிக்கப்பட்டது.

<u>பொருள்–14</u>

**நகரமன்ற துணைத்தலைவர். திரு. க. அன்புசெல்வன் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

28–வது வார்டுக்கு உட்பட்ட பழைய ஜி.எஸ்.டி. சாலையில் மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது. அதனை புதுப்பிக்க வேண்டி அதற்கான மதிப்பீடு தயார்

செய்து பணி மேற்கொள்ள வழங்கியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>தீர்மான எண்.70</u>**

பழைய ஜி.எஸ்.டி சாலை மழைநீர் கால்வாயினை புதுப்பிக்க வேண்டி பொறியாளர் அவர்கள் அதற்கான மதிப்பீடு தயார் செய்திட அனுமதி அளிக்கப்பட்டது.

<u>பொருள்–15</u>

**1–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.G.தமிழ்ச்செல்வன் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 1–வது வார்டில் உள்ள 25 மின்சார கம்பங்களில் தெரு விளக்குகள் இல்லாத காரணத்தால் புதியதாக LED பல்புகள் அமைக்கக் கோருதல்
2. 1–வது வார்டில் உள்ள பாரதி நகர் மற்றும் அன்னை அஞ்சுகம் நகர் சந்திப்பில் உள்ள கல்வெட்டு புதியதாக அமைக்கக் கோருதல்
3. 1–வது வார்டில் உள்ள களத்து மேட்டுத்தெருவில் உள்ள பழைய கல்வெட்டினை அகற்றி புதியதாக கல்வெட்டு அமைக்கக் கோருதல்
4. 1–வது வார்டில் சுமார் 5000 பேர் வசித்து வருகின்றனர். அதனால் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நியாய விலை கடை அமைக்கக் கோருதல்
5. 1–வது வார்டில் உள்ள பல தெருக்களில் சாலை சிதலமடைந்து உள்ளதால் அங்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கக் கோருதல்

**<u>தீர்மான எண்.71</u>**

1. வரிசை எண் 1 முதல் 3 வரை மற்றும் 5 கண்டுள்ள பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

2. வ.எண்–4–ல் கண்டுள்ள பொருள் குறித்து தொடர்புடைய நிர்வாகத்திற்கு கடிதம் அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள்–16</u>

**3 –வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. D. பவித்ரா அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது**

1. 3–வது வார்டுக்கு நகராட்சியால் விநியோகம் செய்யும் குடிதண்ணீர் 5 முதல் 6 நாட்களுக்கு ஆகிறது. அப்படி 3–வது வார்டுக்கு விநியோகம் செய்யும் பட்சத்தில் 12–வது வார்டுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் காரணமாக 3–வது வார்டுக்கு சீரான முறையில் குடிதண்ணீர் வருவதில்லை. மேலும் தண்ணீர் வரும் வேகம் மிகவும் குறைவாக உள்ளது. எனவே 12–வது வார்டு மேட்டுத்தெருவில் உடனடியாக இரண்டு வால்வு அமைத்து 3–வது வார்டுக்கு குடிதண்ணீர் சரியான முறையில் விநியோகம் செய்வதற்கு ஆவண செய்யுமாறு கோருதல்
2. 3–வது வார்டுக்கு உட்பட்ட சின்னம்மன் கோவில் முதல் காந்தி சாலை வரை CC சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே அதனை சரி செய்து தரக் கோருதல்
3. அண்ணா சாலையில் ஆஞ்சநேயர் கோவில் அருகில் உள்ள ஆழ்துளை கிணறு மற்றும் மின் மோட்டார் சரி செய்து தரக் கோருதல்
4. அண்ணா சாலை முதல் சின்னம்மன் ஆலயம் வழியாக காந்தி சாலை வரை உள்ள கால்வாயினை புதியதாக இருபுறமும் 150–க்கு 150 மீட்டர் அளவில் கால்வாய் கட்டுமானம் அமைத்து தரக் கோருதல்

<u>தீர்மான எண்.72</u>

1. வரிசை எண் 1–ல் கண்டுள்ள பொருள் குறித்து பொறியாளர் உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.
2. வரிசை எண் 2 முதல் 4 வரையிலான பணிகளை பொறியாளர் நேராய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

பொருள்–17

**4–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. M. யாஸ்மின் பேகம் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. பாசித் தெருவில் கால்வாய் அமைத்து 25 வருடங்களுக்கு மேலாகின்ற படியால், இந்த பகுதிக்கு புதிய கால்வாய் அமைத்து தரக் கோருதல்
2. சையத் யாகூப் தெருவில் கால்வாய் அமைத்து 20 வருடங்களுக்கு மேலாகின்ற படியால், இந்த பகுதிக்கு புதிய கால்வாய் அமைத்து தரக் கோருதல்
3. ஸ்கூல் தெருவில் அமைந்துள்ள Motor Shed கட்டி 30 வருடங்களுக்கு மேலாகின்ற படியால், இப்போது அது இடிந்து விழும் நிலையில் உள்ளது. ஆகவே, அதை இடித்து புதிய Motor Shed–ஐ அமைத்து தரக் கோருதல்
4. பார்த்தசாரதி தெருவில் அமைந்துள்ள ரேஷன் கடையில் 1500–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இங்கு உள்ளது. இந்த கடையில் 4–வது வார்டு, 3–வது வார்டு, 11–வது வார்டு மற்றும் இதர பகுதிகளில் இருந்து தினந்தோறும் நூற்றுக்கணக்கான நபர்கள் வந்து செல்கின்றனர். ஆகவே இந்த கடைக்கு வெயில் மற்றும் மழை காலங்களில் பொது மக்களுக்கு வசதியாக நிழற்குடை அமைத்து தரக் கோருதல்
5. வேதப்பர் தெருவில் அமைந்துள்ள சிமெண்ட் சாலை குண்டும் குழியுமாக மோசமான நிலையில் உள்ளது. இந்த பகுதியில் பிரதானமான பஜார் வீதி உள்ளது. இங்கு தினந்தோறும் நூற்றுக்கணக்கானோர் இந்த தெரு வழியாக கடந்து செல்கின்றனர். ஆகவே இந்த பகுதிக்கு புதிய தார் சாலை அமைத்து தரக் கோருதல்
6. வேதப்பர் தெருவில் அமைந்துள்ள பால்காரர் சந்துக்கு புதிய சிமெண்ட் சாலை அமைத்து தரக் கோருதல்

தீர்மான எண்.73

1. வரிசை எண்.1,2 (ம) 5,6—ல் கண்டுள்ள பணிகளை நகராட்சியில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
2. வரிசை எண் 3(ம)4—ல் கண்டுள்ள பணியினை ஆணையர் (ம) பொறியாளர் மேலாய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

பொருள்—18

**6—வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. S. ஆனந்த் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. கைலாசநாதர் கோயில், மேட்டுத்தெரு, நடுத்தெரு, பெரிய ரத்தின செட்டி தெருவில் இரவு நேரத்தில் தெரு விளக்குகள் எரியாத காரணத்தினால் திருட்டு, விபத்து போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். ஆதலால் (மின்கம்பங்கள் பழுதடைந்துள்ளது மற்றும் புதிய மின்கம்பங்கள் மாற்றி அமைத்தல்) பதினொன்று (11) இடத்திலுள்ள மின்கம்பங்களில் புதியதாக மின் விளக்குகள் அமைக்கக் கோருதல்
2. நத்தம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் பள்ளியை சுத்தம் செய்வதற்கு தூய்மை பணியாளர் இல்லாத காரணத்தினால் பள்ளி ஆசிரியர்களே பள்ளியை தூய்மை செய்யும் நிலை உள்ளது. எனவே ஒரு தூய்மை பணியாளரை நியமிக்க கோருதல்
3. பள்ளியில் சத்துணவு கூடம் பழுதடைந்துள்ளதால், அதனை சரி செய்து சுற்றுச்சுவர் அமைக்கவும், மேலும் மாணவ மாணவியருக்கு கழிப்பறை கட்டித் தரக் கோருதல்
4. பள்ளிக்கு மேல் தளத்தில் செடிகள் மற்றும் மரங்கள் முளைத்து மழைநீர் வெளியேறும் பாதைகளை அடைத்துள்ளதால் மழை நாட்களில் மழைநீர் மேலேயே தேங்கி நிற்கிறது. இதனால் சுவர்களில் நீர் கசிவின் காரணத்தினால் விரிசல் ஏற்பட்டுள்ளது. அதனை சரி செய்யக் கோருதல்
5. நத்தம் நகராட்சி தொடக்கப்பள்ளி அமைந்துள்ள மழலையர் பள்ளி கட்டிடத்தில் ஷீட் மேற்கூரை, தரை, சுற்றுச் சுவர்கள் பழுதடைந்துள்ளது.

ஆகவே, ஷீட் மேற்கூரையை அகற்றி, தளம் அமைத்து, சுற்று சுவர்களை சிமெண்ட் பூசி, தரையை புதிய டைல்ஸ் பதித்து, அந்தக் கட்டிடத்தை புதுப்பித்து தரக் கோருதல்

6. மேட்டுத்தெரு கொடி கம்பம் அருகில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டியுடன் மின் மோட்டார் பொறுத்தப்பட்ட ஆழ்துளை கிணற்றில் தண்ணீரின் அளவு அடிக்கடி குறைந்து விடுவதால் அதிலுள்ள பைப் (Hose) அளவு போதுமானதாக இல்லை. ஆகவே, அதை பயன்படுத்த முடிவதில்லை. எனவே , அதிலுள்ள பைப் (Hose)–ஐ நீக்கிவிட்டு புதியதாக அந்த ஆழ்துளை கிணற்றின் முழு ஆழத்திற்கு ஏற்ப பைப் (Hose)–ஐ இறக்கி சரி செய்து மக்கள் பயன் அடைய செய்யக் கோருதல்
7. மேட்டுத்தெரு அங்காளம்மன் கோவில், நடுத்தெரு, கைலாசநாதர் கோயில் தெரு LIONS CLUB, கைலாசநாதர் கோவில் தெரு, முக்தி விநாயகர் கோவில் ஆகிய இடங்களில் உள்ள (Hand Pump Borewell) பழுதடைந்து பயன்பாடின்றி இருக்கிறது. ஆகவே இதனை நீக்கிவிட்டு, ஆழப்படுத்தி நீர்த்தேக்கத்தொட்டியுடன் மின் மோட்டார் அமைத்து, அந்த குடி தண்ணீர் அப்பகுதி மக்களுக்கு பயன் அடையுமாறு செய்ய வேண்டும். மேற்கண்ட அனைத்தும் அப்பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை ஆகும். ஆகவே, தலைவர் அவர்கள் ஆய்வு செய்து அப்பகுதி மக்களின் குடி தண்ணீர் பிரச்சனையை விரைவாக நீக்கி சரிசெய்து தரக் கோருதல்
8. கைலாசநாதர் கோவில் முதல் சேப்பாட்டி அம்மன் கோவில் சந்திப்பு வரை சேதமடைந்த பழைய சிமெண்ட் சாலையை அமைத்து தரக் கோருதல்
9. 6–வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் RO Plant அமைத்து தரக் கோருதல்

**<u>தீர்மான எண்.74</u>**

1. வரிசை எண் 1 (ம) 4–ல் கண்டுள்ள பணியினை பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் நேராய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
2. வரிசை எண் 2 மற்றும் 3–ல் கண்டுள்ள பணியினை ஆணையர் அவர்கள் மேலாய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
3. வரிசை எண் 5 முதல் 9 வரையிலான பணியினை நகராட்சியில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**<u>பொருள்–19</u>**

**07–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. D. ரேகா அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. உயர்திரு செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களுக்கும் பெரும் மதிப்பிற்குரிய நகரமன்ற தலைவர் அவர்களுக்கும் 7–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் பணிந்து வேண்டிக் கொள்வது, எங்கள் 7–வது வார்டை ஒட்டி இருக்கும் புறவழிச் சாலையை (பைபாஸ்) கடந்து தான் நாங்கள் செங்கல்பட்டு சுடுகாட்டிற்கும் நகராட்சி குடிநீர் நீரேற்றம் நிலையத்திற்கும் செல்ல வேண்டும். அப்படி கடந்து செல்லும் போது அந்த சாலையில் அமைக்கப்பட்டிருக்கும் சாலை ஓர தடுப்புச்சுவர் புறவழிச்சாலையில் பாதி இடத்திற்கு மேல் சாலையில் தடுப்பு உள்ளதால் அங்கு அடிக்கடி சாலையில் விபத்து ஏற்பட்டு பல உயிரிழப்புகள் ஏற்பட்ட வண்ணம் உள்ளதால் ஆணையர் அவர்களும் நகரமன்ற தலைவர் அவர்களும் நெடுஞ்சாலை துறைக்கு இந்த இடத்தின் நிலையை விளக்கமாகக் கூறி அந்த சாலை ஓர தடுப்புச் சுவரை உடனடியாக அகற்றி அந்த இடத்தில் மேலும் உயிரிழப்பு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருதல்
2. உயர்திரு செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களுக்கும் பெரும் மதிப்பிற்குரிய நகரமன்ற தலைவர் அவர்களுக்கும் 7–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் பணிந்து வேண்டிக் கொள்வது, புறவழிச் சாலையை கடக்கும் பகுதியை இரவு நேரத்தில் கடந்து செல்ல போதுமான வெளிச்சம் இல்லாததால் அந்த இடத்தில் உயர்கோபுர மின் விளக்குகள் அமைத்து தருமாறு கோருதல்

**<u>தீர்மான எண்.75</u>**

1. வரிசை எண் 1 மற்றும் 2–ல் கண்டுள்ள பணிகளை ஆணையர் மற்றும் பொறியாளர் நேராய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொருள்–20

**08–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. S. பிரபுவேல் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. உயர்திரு செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களுக்கும் பெரும் மதிப்பிற்குரிய நகரமன்ற தலைவர் அவர்களுக்கும் 8–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் பணிந்து வேண்டிக் கொள்வது, எங்கள் 8–வது வார்டை ஒட்டி இருக்கும் புறவழிச் சாலையை (பைபாஸ்) கடந்து தான் நாங்கள் செங்கல்பட்டு சுடுகாட்டிற்கும் நகராட்சி குடிநீர் நீரேற்றம் நிலையத்திற்கும் செல்ல வேண்டும். அப்படி கடந்து செல்லும் போது அந்த சாலையில் அமைக்கப்பட்டிருக்கும் சாலை ஓர தடுப்புச்சுவர் புறவழிச்சாலையில் பாதி இடத்திற்கு மேல் சாலையில் தடுப்பு உள்ளதால் அங்கு அடிக்கடி சாலையில் விபத்து ஏற்பட்டு பல உயிரிழப்புகள் ஏற்பட்ட வண்ணம் உள்ளதால் ஆணையர் அவர்களும் நகரமன்ற தலைவர் அவர்களும் நெடுஞ்சாலை துறைக்கு இந்த இடத்தின் நிலையை விளக்கமாகக் கூறி அந்த சாலை ஓர தடுப்புச் சுவரை உடனடியாக அகற்றி அந்த இடத்தில் மேலும் உயிரிழப்பு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருதல்
2. உயர்திரு செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களுக்கும் பெரும் மதிப்பிற்குரிய நகரமன்ற தலைவர் அவர்களுக்கும் 8–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் பணிந்து வேண்டிக் கொள்வது, புறவழிச் சாலையை கடக்கும் பகுதியை இரவு நேரத்தில் கடந்து செல்ல போதுமான வெளிச்சம் இல்லாததால் அந்த இடத்தில் 2 உயர்கோபுர மின் விளக்குகள் அமைத்து தருமாறு கோருதல்

தீர்மான எண்.76

2. வரிசை எண் 1 மற்றும் 2–ல் கண்டுள்ள பணிகளை ஆணையர் மற்றும் பொறியாளர் நேராய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொருள்–21

**9 –வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. இரா. அமுல்ராஜ் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது**

1. 9–வது வார்டில் உள்ள கல்வாரி மலை தெரு கடைசி பகுதியில் ஊத்தங்குழியில் உள்ள சிறு விசை மின் மோட்டார் குடிநீர் தொட்டி பல வருடங்களாக செயல்படாமல் உள்ளது. இதனால் அப்பகுதியில் வசித்து வரும் சுமார் 30– க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் தண்ணீருக்காக மிகவும் சிரமப்படுகின்றனர். கோடைக்காலம் என்பதால் தண்ணீரின் தேவை கருதி சிறு விசை மின் மோட்டார் குடிநீர் தொட்டியை சரி செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்திட தீர்மானம் இயற்றி தரக் கோருதல்
2. 9–வது வார்டில் சின்ன நத்தம் 19 தட்டான் மலை தெரு கழிவுநீர் மற்றும் மழைநீர் அனைத்தும் காத்தான் தெரு மற்றும் தட்டான் மலை தெரு இடையில் அமைக்கப்பட்டுள்ள 8 அங்குலம் பைப் லைன் வழியாக செல்கின்றன. அகலம் அதிகம் இல்லாததால் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் அனைத்தும் சாலையில் செல்வதால் பள்ளி கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் முதல் வேலைக்கு செல்பவர்கள் என அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். எனவே அந்த பைப் லைனை அகற்றி விட்டு சிறு பாலம் கல்வெட்டு அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திட தீர்மானம் இயற்றி தரக் கோருதல்
3. சின்ன நத்தம் 9–வது வார்டில் உள்ள 19 தட்டான் மலை தெரு மையப்பகுதியில் உள்ள முத்து மாரியம்மன் கோவில் பின்புறம் பகுதியில் வசித்து வரும் சுமார் 50–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீருக்காக அதிக சிரமப்படுகின்றனர். மேலும் இப்பகுதியில் கிணறு மற்றும் போர்வெல் வசதி கிடையாது. எனவே மேற்படி குடும்பங்களின் குடிநீர் தேவை கருதி புதிய குடிநீர் பைப் லைன் அமைத்திட நடவடிக்கை எடுத்திட தீர்மானம் இயற்றி தரக் கோருதல்
4. 9–வது வார்டில் உள்ள படிக்கட்டு தட்டான் மலை தெரு சாலை சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டது. தற்போது மக்கள் பயன்படுத்துவதற்கு சிரமமாக மேடு பள்ளமாக உள்ளது. எனவே இந்த சாலையை புதுப்பித்து சிமெண்ட் சாலை அமைத்து தரக் கோருதல்

**<u>தீர்மான எண்.77</u>**

1. வரிசை எண் 1 மற்றும் 3–ல் கண்டுள்ள பணிகளை பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் நேராய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.
2. வரிசை எண் 2 மற்றும் 4–ல் கண்டுள்ள பணியினை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள்–22</u>

**10–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. S. புஷ்பராணி அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 10–வது வார்டுக்கு உட்பட்ட கலைஞர் கருணாநிதி 1–வது தெருவில் உள்ள கல்வெட்டு பழுது அடைந்து உள்ளது. இதனால் குடிநீரில் கழிவுநீர் கலந்து வருகிறது. இதனால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே இந்த கல்வெட்டை சரி செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்
2. தட்டான் மலை 5–வது தெருவில் அமைந்துள்ள (அருந்ததி பாளையம்) கல்வெட்டில் உள்ள தண்ணீர் ரோட்டின் இரு புறமும் தேங்கி உள்ளதால் கொசுக்கள் அதிகமாக உற்பத்தி ஆகிறது. இதனால் டெங்கு, காலரா போன்ற வியாதிகள் ஏற்பட்டு வருகிறது. மக்கள் பாதுகாப்பை கருதி உடனடியாக கல்வெட்டை சீர்செய்து தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்
3. கலைஞர் கருணாநிதி தெருவில் சாலையின் நான்கு புறமும் பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பாதுபாப்பை கருதி உடனடியாக சீர்செய்து தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்

**<u>தீர்மான எண்.78</u>**

வரிசை எண் 1 முதல் 3 வரையிலான பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள்–23</u>

**11–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. K.C. ஸ்ரீசந்தியா அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. வேதப்பர் தெருவில் அடங்கிய பழைய ரேஷன் கடை வீதியில் இருபுறமும் கால்வாய் மற்றும் சாலை அமைத்து தருமாறு கோருதல்
2. சுந்தர விநாயகர் கோவில் தெருவில் கால்வாய் புதியதாக அமைத்து தருமாறு கோருதல்
3. வேதப்பர் தெருவில் சிறு சந்தில் ஒரு புறம் கால்வாய் பழுது அடைந்துள்ளதால் புதிய கால்வாய் அமைத்து தருமாறு கோருதல்

<u>தீர்மான எண்.79</u>

வரிசை எண் 1 முதல் 3 வரையிலான பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள்–24</u>

**12–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. N. சிந்தியா அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

12–வது வார்டு ஜீவானந்தம் தெருவில் கடந்த 10 வருடங்களாக கால்வாய் பிரச்சனை சரி செய்யாமல் இருப்பதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே 200 மீட்டர் நீளம் 21/2 அடி அகலம் 3அடி ஆழத்தில் கால்வாய் கட்டித்தர கோருதல்

<u>தீர்மான எண்.80</u>

நகராட்சி நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது

பொருள்–25

**13–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. K. அருண்குமார் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

சுந்தரமூர்த்தி விநாயகர் கோவில் தெருவில் (மக்கான் சந்து பகுதி ) சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிய சிமெண்ட் சாலை அமைத்து தரக் கோருதல்

தீர்மான எண்.81

நகராட்சி நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது

பொருள்–26

**14–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. V. பரமேஸ்வரி அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

14–வது வார்டுக்கு உட்பட்ட பெரியார் தெருவில் (கற்பகம் சில்க்ஹவுஸ்) அருகில் பல ஆண்டுகளாக கால்வாய் உடைந்த நிலையில் உள்ளது. இதனால் பொது மக்கள் மிகவும் சிரமபட்டு நடக்க வேண்டியுள்ளது. எனவே இக்கல்வெட்டு கால்வாயினை சரிசெய்து தருமாறு கோருதல்

தீர்மான எண்.82

நகராட்சி நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது

பொருள்–27

**15–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. S. சதீஷ் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 15–வது வார்டுக்கு உட்பட்ட தேவராசனார் தெருவில் நாகா கேஸ் எதிர்புறமும், பிள்ளையார் குளம் தெருவிற்கு பின்புறம் உள்ள கால்வாய்க்கு

திட்ட மதிப்பீடு தயார் செய்து மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கோருதல்

2. தேவராசனார் தெருவில் நாகா கேஸ் எதிர்புறமும், பிள்ளையார் குளம் தெருவிற்கு பின்புறம் உள்ள பெரிய கால்வாய் முற்றிலும் சேதமடைந்தும், மரச்செடிகள் வளர்ந்தும், கழிவுநீர் செல்வதற்கு வசதி இல்லாததால் கழிவு நீர் தேங்கியுள்ளது. இதன் காரணமாக ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள வீடுகள் மற்றும் பிள்ளையார் குளம் பாய் தெருவில் அனைத்து வீடுகளிலும் போர் மற்றும் கிணற்றில் தேங்கி உள்ள கழிவுநீர் கலந்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதற்கு நிரந்தர தீர்வாக சுமார் 4 அடி அகலமும் 350 அடி நீளமுள்ள மழைநீர் வடிகால் மற்றும் கால்வாயை தூர்வாரி புதியதாக அமைத்து தருமாறு கோருதல்
3. C.N.மகாதேவன் தெருவில் புதியதாக CULVERT (கல்வெட்டு) சுமார் 25’அடி 4’ அடி அளவிற்கு அமைத்து தருமாறு கோருதல்
4. மேலும் C.N. மகாதேவன் தெரு மற்றும் தேவராசனார் தெரு சந்திப்பில் உள்ள மற்றொரு CULVERT (கல்வெட்டு) சுமார் 25’ அடி 4’ அடி அளவிற்கு புதியதாக அமைத்து தருமாறு கோருதல்

<u>தீர்மான எண்.83</u>

வரிசை எண் 1 முதல் 4 வரையிலான பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள்—28</u>

**16—வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. S. unkZ அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. வரதனார் தெருவில் (ஸ்டேட் பேங்க் அருகில்) சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிதாக சாலை அமைத்தல்
2. வரதனார் தெருவில் ஸ்டேட் பேங்க் எதிரில் சுமார் 300 மீ அளவிற்கு கால்வாய் புதிதாக அமைத்தல்
3. வரதனார் தெருவில் உள்ள பிள்ளையார் கோயில் எதிரில் சுமார் 300 மீ அளவிற்கு கால்வாய் புதிதாக அமைத்தல்
4. அளகேசன் சாலையில் 600 மீ அளவிற்கு கால்வாய் புதிதாக அமைத்தல்

5. தேசதாஸ் தெருவில் சுமார் 300 மீ அளவிற்கு கால்வாய் புதிதாக அமைத்தல்
6. தேவராஜனார் தெருவில் ( ராதா மஹால் எதிரில்) 150 மீ அளவிற்கு சாலை அமைத்தல்
7. அளகேசன் சாலையில் சுமார் 200 மீ அளவிற்கு புதிதாக சாலை அமைத்தல்

<u>தீர்மான எண்.84</u>

வரிசை எண் 1 முதல் 7 வரையிலான பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள்–29</u>

**19–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.A.R. தனலட்சுமி அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது**

1. அங்காளம்மன் கோவில் தெருவில் உள்ள சிமெண்ட் சாலை மற்றும் கால்வாய் பழுதடைந்துள்ளதால் புதியதாக அமைத்து தரக் கோருதல்
2. நாவலர் நெடுஞ்செழியன் தெரு இறக்கத்தில் உள்ள கல்வெட்டு கீழ் இறங்கி உள்ளதால் கழிவுநீர் வெளியில் செல்லாமல் சாலையிலேயே தேங்குகிறது. இதனால் புதிய கட்டுமானம் அமைத்து தரக் கோருதல்

<u>தீர்மான எண்.85</u>

வரிசை எண் 1 முதல் 2 வரையிலான பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள்–30</u>

**22–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. S. சத்தியப்பிரியா அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது**

இந்திர நாராயண திருமண மண்டபம் பக்கத்தில் உள்ள சாலை பழுதடைந்து 30 வருடங்கள் ஆகின்றது. இந்த சாலையை யாரும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் சமூக விரோதிகள் சட்ட விரோத செயல்களுக்கு

பயன்படுத்துகின்றனர். இதனால் பொதுமக்கள் இந்த சாலையில் நடமாட முடியாத சூழ்நிலை உள்ளது. இந்த சாலையை புதியதாக சிமெண்ட் சாலை அமைத்து கழிவு நீர் கால்வாய் அமைத்து தர தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்

<u>தீர்மான எண்.86</u>

மேற்படி பணியினை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள்–31</u>

**27–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. S. பானுப்பிரியா அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. ஏகாம்பரம் அவென்யு பகுதியில் சாலை பழுதடைத்து உள்ளது. எனவே இப்பகுதியில் சாலை அமைத்து தரக் கோருதல்
2. குண்டூர் LIC சாலை பகுதியில் மழைநீர் வடிகால்வாய் இரு புறங்களிலும் சேதம் அடைந்துள்ளது. எனவே இப்பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்து தரக் கோருதல்

<u>தீர்மான எண்.87</u>

வரிசை எண் 1 முதல் 2–ல் கண்டுள்ள பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள்–32</u>

**29–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. P. nfhÃeh¤ அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

புதிய ஏரி மதுரை வீரன் கோவில் தெரு, முதல் மற்றும் இரண்டாவது குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கால்வாய்களை கடந்த 25 ஆண்டுகாலமாக பழுதடைந்த நிலையில் உள்ளது. இக்கால்வாய்களை சீரமைத்து தருமாறு கோருதல்

| | |
|---|---|
| 1. கழிவுநீர் கால்வாய் | • புது ஏரி மதுரை வீரன் கோவில் 1–வது தெருவில் அமைந்திருக்கும் பழுதடைந்த கால்வாய் சரி செய்ய கோருதல்.<br>• ஒஞ்சியம்மன் கோவில் தெருவிற்கும் வரதராஜன் நகர் இணைப்புச் சாலைக்கும் நடுவில் உள்ள கழிவுநீர் கால்வாய் சரி செய்ய கோருதல்.<br>• மதுரை வீரன் பிரதான சாலைக்கும், பிள்ளையார் கோவில் தெருவிற்கும் இடைப்பட்ட கால்வாய் அமைக்க கோருதல்.<br>• வரதராஜன் நகர் 4–வது தெரு மற்றும் 2–வது பிரதான சாலை இணைப்பு கால்வாய் அமைக்க கோருதல்.<br>• மதுரை வீரன் கோவில் தெரு, 4–வது குறுக்கு சந்து கால்வாய் அமைக்க கோருதல்.<br>• மதுரைவீரன் கோவில் தெரு, முதல் குறுக்கு சந்து கால்வாய் அமைக்க கோருதல். |
| 2. சாலை | • மதுரை வீரன் கோவில் தெரு, 4–வது குறுக்கு சந்து மற்றும் 6–வது குறுக்கு சந்து சாலை அமைக்க கோருதல்.<br>• வெற்றி விநாயகர் கோவில் தெரு, பிரதான சாலை அமைக்க கோருதல்.<br>• சுந்தர விநாயகர் கோவில் தெரு, குறுக்கு சந்து சாலை அமைக்க கோருதல்.<br>• ஒஞ்சியம்மன் கோவில் சாலை |

| | |
|---|---|
| | அமைக்க கோருதல்.<br>• மதுரை வீரன் கோவில் 2–வது பிரதான சாலை அமைக்க கோருதல். |
| 3. கல்வெட்டு | • மதுரைவீரன் கோவில் தெரு, 6–வது குறுக்கு தெரு 25 அடி பெரிய கால்வாய் அமைக்க கோருதல்.<br>• வரதராஜன் நகர் பூங்கா எதிரில் அமைந்துள்ள மழை நீர் கால்வாய் கல்வெட்டு அமைக்க கோருதல்.<br>• வரதராஜன் நகர் 3–வது பிரான சாலை கல்வெட்டு அமைக்க கோருதல்.<br>• சுமை தூக்கும் தொழிலாளர் குடியிருப்பு இணைப்பு சாலை கல்வெட்டு அமைக்க கோருதல் |
| 4. ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மின் மோட்டார் | • புது ஏரி மதுரை வீரன் கோவில் தெரு, 5–வது குறுக்குத் தெரு அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் அமைக்க கோருதல்<br>• வரதராஜன் நகர் பூங்காவில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் அமைக்க கோருதல் |
| 5. தெருவிளக்கு | • 29–வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் 15 மின்விளக்கு அமைக்க கோரி மற்றும் வரதராஜன் நகர் பூங்காவில் 6 விளக்குகள் அமைக்க கோருதல் |

<u>தீர்மான எண்.88</u>

வரிசை எண் 1 முதல் 5 வரையிலான பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள்–33</u>

**33–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. K.G. சந்தோஷ் கண்ணன்அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள் குறித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

செங்கல்பட்டு அண்ணா நகரில் உள்ள **9**–வது குறுக்குத்தெரு, **2**–வது மெயின் ரோடு ஜங்ஷனில் கல்வெட்டு அமைத்து தருமாறு கோருதல்

<u>தீர்மான எண்.89</u>

நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகரமன்றம்.

# செங்கல்பட்டு நகராட்சி

## <u>அவசரக் கூட்டம்</u>

**<u>2022ம் ஆண்டு மே மாதம் 19ம் தேதி பிற்பகல் 03.00 மணியளவில்</u>**

**<u>செங்கல்பட்டு நகராட்சி நகரமன்ற கூடத்தில் நடைப்பெற்ற அவசரக் கூட்டம்</u>**

---

அரசு ஆணை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–ன் படியும் மற்றும் இந்நகர மன்ற தீர்மானம் எண்.54 நாள்.11.04.2022 படியும் செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 01.04.2022–ம் தேதி முதல் சொத்துவரி/காலிமனைவரி பொது சீராய்வு செய்ய மண்டல அடிப்படை மதிப்பு மற்றும் உயர்வு செய்வதற்கான காரணிகளுடன் விவரங்களை செங்கல்பட்டு நகராட்சி இணையதள முகவரி மற்றும் நகராட்சி அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், இது குறித்த விளம்பரம் 13.04.2022 தேதிய தினத்தந்தி, தினகரன் மற்றும் 15.04.2022–ம் தேதிய இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அறிக்கை வெளியிட்டு 30 தினங்களுக்குள் பொது மக்களிடமிருந்து ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகள் ஏதும் வரவில்லை என்பதனை மன்றத்தில் பதிவு செய்யப்படுகிறது. எனவே, சொத்துவரி/காலிமனைவரி பொது சீராய்வு மதிப்பினை ஊர்ஜிதம் செய்யவும் இது குறித்து விளம்பர அறிக்கை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் விளம்பரம் செலவினத்திற்கு, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. விளம்பரம் அறிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1014/2022/அ1)

**<u>தீர்மான எண்.90 நாள். 19.05.2022</u>**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

நகர்மன்ற தலைவர்,
செங்கல்பட்டு நகராட்சி